# திருக்குறள் நெறியில் சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் அறங்கள்

# Silappathikaram in Thirukkural Showing Lifemarks

**முனைவர் இல. தங்கராஜ்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
த.பே.மா.லு. கல்லூரி, பொறையார்

**Dr. L. Thangaraj**
*Assistant Professor, Tamil Department*
*T.P.M.L. College, Poraiyar*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்ககாலம் தொடர்ந்து தமிழுக்கும் தமிழருக்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகலாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது.*

*வள்ளுவம் தமிழனுக்குரியது என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உணர்ந்த பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு "எனப் புகழ்ந்துள்ளார். வள்ளுவப் பொருட்ச் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார்" எல்லாப் பொருளும் இதன் பால்உள" என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து அதன் நுண்பொருள் சிறப்பை உணர்த்துவதாகும்.*

*தமிழ் காப்பிய மரபில் தனித்துவமான அடையாளமாக விளங்கும் முத்தமிழ் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று பாரதியார் புகழ்ந்துள்ளார். குடிமக்களின் வாழ்க்கை அறங்களை எடுத்துக் கூறும் குடிமக்கள் காப்பியமாகவும் விளங்குகிறது. எனவே இதில் கூறப்பட்டுள்ள முப்பெரும் அறங்களான*

1. *அரசியல் பிழை செய்தவர்களுக்கு அறமேயமனாக அமையும்.*
2. *பெருமை மிக்க பத்தினியை பெரியோர் தொழுவார்.*
3. *ஊழ்வினை தொடர்ந்து வந்து பற்றியே தீரும்.*

## Abstract

*Following the Sangam age, in Valluvam, which is the repository of knowledge between Tamils and Tamil's, there is a world view of worldly thinking and upliftment of man. Bharathiyar, who realized that Valluvar belonged to all the people of the world beyond the position that it belonged to a Tamilian, praised him as "Valluvan Thannai Ulakinuke Thantha Vaan Pugazh Konda Tamil Nadu". These are the transcendences of the time and boundaries of the Valluvar and the realization of its subtle significance. The unique identity of the Tamil kappiya tradition is the Muthamizh Kaapiyam Silappathikaram. Bharathiyar praised him as the 'Nenjai Allum 'Silappathikaram'. Therefore, the three great marks mentioned in it are*

1. *Those who have made political mistakes is dangerous to their life.*
2. *The great ones will worship the proud wife.*
3. *Follow the disaster and take care of it.*

*This article compares the values with those of the two.*

*ஆகிய அறங்களை திருக்குறள் அறங்களோடு ஒப்பிட்டுக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *பாம்பாட்டி சித்தரின் பாதம், சித்தர், தத்துவம், குண்டலினி, யோகம்.*

***Keywords:*** *Sangam Kalam, Valluvam, Thirukkural, Muthamizh Kappiyam, Silappathikaram, Life Sciences.*

**Citation**

Nagammal, T. "Silappathikaram in Thirukkural Showing Lifemarks." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 2, 2023, pp. 125–133.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20096757*

**முன்னுரை**

*வாழ்வியல் அறம் என்பது தமிழர்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என்பதல்ல. இவைவை யகமாந்தர் அனைவருக்கும் பொருந்தக் கூடியதாகும். இன்று உலகம் முழுவதும் பேசப்படுகின்ற உலகமயமாக்கல் என்ற குவலயக் குடும்பம் அணுகுமுறைகள் குறித்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மாபெரும் தத்துவத்தின் கீழ் உலக மக்கள்யாவரும் உறவினர்களே இதில் நாடு, இனம், நிறம் எனப் பாகுபாட்டிற்கு இடமில்லாமல் யாவரும் உறவினர்களே எல்லா நாடுகளும் பண்பட்ட ஊர்களே என்ற மிகப்பெரிய உயரிய வாழ்வியலை உணர்த்தும் அறநெறியாக உள்ளது.*

*வாழ்வியல் நெறிகள் என்ற சொல்லுக்கு ஆங்கிலச் சொற்களஞ்சியம் குறிப்பிடும் பொருள்* Ethics *என்பதாகும். இதற்கு தமிழில் அறநெறிகள், அறிவியல், நன்நெறிக் கோட்பாடுகள், வாழ்வியல் ஒழுகளாறுகள், பண்புகள், ஒழுக்கமுறைமைகள், முதலான சொற்கள் வழங்கி வருகின்றன. இவற்றில் வாழ்வியல் அறநெறிகள் என்ற சொல்லே ஏற்பினைப் பெற்றுள்ளது. சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் ஒழுக்கங்களையும் வகுத்துக் கொள்ளவேண்டும். இவைகளைத் தான் நாம் வாழ்வியல் அறங்கள் என்று கூறுகிறோம்.*

**வாழ்வியல் பதிவு**

*வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்றுவிடாமல் இந்தநூற்றாண்டு மனிதனுக்கும் வாழச் சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்றுவிடாமல் மனித வாழ்வியல் கூறுகளையும் எடுத்துக்காட்டும் பதிவுகளாக உள்ளது. அதேபோல் சிலப்பதிகாரம் அதன்காலம் தொட்டே மிகவும் சாதாரணமான குடிமக்களின் வாழ்வியலை தெளிவாக எடுத்துக்காட்டும் காப்பியமாகச் சிறந்து விளங்கிக் கொண்டு இருப்பதையும் அறியலாம்.*

**வாழ்வியல் அறங்கள்**

*வாழ்வியல் அறநெறிகள் என்றென்றும் மாறாதவை, இவை உலகப் பொதுவானவை, இவை இருபிரிவுகளாக உள்ளன. ஒன்று தனி மனித வாழ்வியல் அறம் இரண்டாவது சமூக வாழ்வியல் அறம் என்பதாகும். சமூக நெறிமுறைகளை அறம், பொருள், இன்பம் என்று மூன்றாகப் பகுத்துக் கூறுவது பண்டைய தமிழ்மரபு. "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் இன்பத்தை தழுவி நிற்கும். இன்ப நுகர்ச்சிக்குத் தேவைப்படுவது பொருள் அப்பொருள் அறவழியில் வரவேண்டும் என்பதே பண்டைத் தமிழரின் வாழ்வியல் அறநெறியாகும். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றுடன் வீடு என்ற ஒன்றை சேர்த்து உறுதிப் பொருள்களை பக்தி இலக்கிய காலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டது. முப்பாலில் நான்கு பாகுபாடுகளையும் அடக்கி கூறியிருப்பது திருவள்ளுவரின் தனித்துவமான சிறப்பாகும். இதனையே பின்வரும் திருக்குறள் வாய்லாக உணர்த்துகிறார்.*

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்வான் உறையும்***
***தெய்வத்துள் வைக்கப்படும்***[1]

**அறம் இலக்கியங்களில் விளக்கம்**

*அறு என்ற வினைச்சொல் அடியாகப் பிறந்ததே "அறம்" என்னும் சொல்.*

*இச்சொல்லுக்கு அறுத்துச்செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருட்கள் வழங்கி வருகின்றன. இத்தகையசொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்கு மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினைகளை அறுத்தெறிவதே அறம் என்ற ஆன்மீக விளக்கமும் தரப்படுகிறது.*

**அறத்தின் அடிப்படை**

*அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்க்கும் பொழுது செயலுக்கு அடிப்படையாக இருப்பது எண்ணமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் செயலும் தூய்மையாக அமைய முடியும். எண்ணத்தை எழுதுவதற்கு இருப்பிடமாக உள்ள மனம் மாசு இல்லாததாக இருக்க வேண்டும். மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே சிறந்த அறம் ஆகும். மன மாசு என்பது பொறாமை, பேராசை, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை. இதனையே*

**"*மனத்துக் கண்மாசிலன் ஆதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற*"[2]**

*என்ற குறள் மூலம் விளக்குகிறார் திருவள்ளுவர். மேலும்*

**"*அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல்நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்*"[3]**

*என்றும் கூறுகிறார். இதனடிப்படையில் பார்க்கும் பொழுது அறம் என்பது எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் சேர்ந்த ஒன்றாகும் என்று அறியப்படுகிறது.*

**வாழ்க்கை அறம்**

*வாழ்க்கையை அடிப்படையில் இல்லறம் துறவறம் என்று இரண்டு வகைப்படுத்திக் கொள்ளலாம். அன்பும் அறனும் உடையது இல்வாழ்க்கை அதனால் பண்பும் பயனும் பெறத் தக்கதாக உள்ளது. துறவு வாழ்க்கை என்பது பற்றற்றான் பற்றினைப் பற்ற அனைத்துப் பற்றுகளையும் விட்டு விடுவது ஆகும். இல்வாழ்க்கை சிறந்த தாதுறவு வாழ்க்கை சிறந்ததா என்று அறிவதை விட அவரவர் எடுத்துக் கொண்ட வாழ்க்கையை சிறப்புடன் அமைத்துக் கொள்வதுஅவ்வாழ்க்கையில்எப்பஜஅறங்களைக்கடைபிடிப்பது என்றுகாண்பதேமுன்னேற்ற முடையதாகும். அம்முன்னேற்ற மிக்க பாதையைத் தான் திருக்குறளும் சிலப்பதிகாரமும் சமுதாயத்திற்கு வடிவமைத்துக் காட்டியுள்ளது.*

**கண்ணகி காட்டும் வாழ்வியல் அறம்**

*சிலம் பின் கதைத் தலைவியாகிய கண்ணகி இன்பங்களைவிடவும் துன்பங்களையே அதிகமாக அனுபவித்தவள். அந்நிலையிலும் தன்னிலை மாறாமல் பத்தினித் தெய்வமாக உயர்ந்தவள். கணவன் கோவலன் தன்னை விட்டுப் பிரிந்து விட்டான் என்பதற்காக கலங்காமல் தன் வாழ்வை இயல்பாகவே நடத்தியவள் கண்ணகி அவ்வாழ்வினை கோவலன் அறிய முற்பட்ட போது தனித்து வாழ்ந்ததால் தான் பட்ட துயரங்களை எடுத்துறைக்கின்றாள்.*

***"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்***
***துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்***
***விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[4]***

*என்ற சிலப்பதிகாரம் கொலைக் கலக்காதைப் பாடலில்வரும் நான்கு அறங்களை தன்னால் செய்ய முடியவில்லை என்று கண்ணகி கோவலன் தன்னை பிரிந்த காலத்தில் வருத்தப்பட்டுள்ளாள். அறம் செய்வோருக்கு உதவுதல், அந்தணர் மரபினரைப் போற்றுதல், துறவிகளை எதிர்கொண்டு அவர்களுக்கு வேண்டியவற்றைச்செய்தல், விருந்தினர்களைப்பாதுகாத்தல், ஆகியஅறங்களை கணவனைப் பிரிந்து தனித்து இருக்கும் பொழுது செய்ய முடியவில்லை என்று வருந்தியுள்ளாள் கண்ணகி. கணவனும் மனைவியும் இணைந்து இல்லறம் பேணுதல் என்பதே சிறந்தது ஆகும். தனித்து உறைவது என்பது சிறப்பல்ல என்ற அடிப்படை இல்லற அறம் இங்கு காட்டப்படுகிறது. இக்கருத்து*

***"இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்***
***நல்லாற்றின் நின்ற துணை"[5]***

*என்ற திருக்குறள் காட்டும் வாழ்வியல் சிந்தனையோடு ஒப்பு நோக்கத் தக்கதாக அமைந்துள்ளதைக் காணலாம்.*

**அரசியல் பிழை செய்தவர்களுக்கு அறமேயமனாக வரும்**

*அரச தர்மம் என்று கருதப்பட்ட தன்மையுடன் ஆராய்ந்து நீதிநெறி செலுத்தாத மன்னன் தாழ்ந்த நிலையில் நின்று தானே கெடுவான் என்பது திருவள்ளுவர் வகுத்துள்ள அறநெறியாகும். இக்கருத்தினை*

***"எண்பதத் தான் ஓரா முறைசெய்யா மன்னவண்***
***க்ண் பதத்தான் தானே கெடும்"[6]***

*என்ற குறள் மூலம் காட்டியுள்ளார். செங்கோண்மை என்பது நல்ல முறையில் ஆட்சி செய்தல். ஒரு வழக்கை நன்கு ஆராய்ந்து ஒரு பக்கமே அன்பு செலுத்தி சார்ந்துவிடாமல் நடுநிலையுடன் இருந்து சாட்சிகளை தீரவிசாரித்த பிறகு தீர்ப்பு வழங்குவது செங்கோண்மை ஆகும். அதுவே நல்ல ஆட்சி முறைக்கு சிறந்ததும் ஆகும். இதனை*

***"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்துயார் மாட்டும்***
***தேர்ந்து செய்வஃதே முறை"[7]***

*என்னும்குறளில்திருவள்ளுவர்குறிப்பிட்டுள்ளார். வள்ளுவரின்வாழ்வியல்அறத்தைஅப்படியே இளங்கோவடிகள்*

***"சினை அலர் வேம்பனதேரான் ஆகி***
***ஊர்காப்பாளரைக் கூவி ஈங்கு என்***
***தாழ் பூங்கோதை தன் கால் சிலம்பு***
***கன்றிய கள்வன்கையது ஆகில்***
***கொன்று அச்சிலம்பு கொணர்கஈங்கு"[8]***

*என்று தம்முடைய காப்பியத்தில் பாண்டிய மன்னன் ஆராய்ந்து கூறாததால் வரும் தீமையை கூறியுள்ளார். அறம் அல்லாதவைகளைச் செய்தவர்களுக்கு அறமே கூற்றாக அமையும். அறமே எமனாக இருந்து தண்டிக்கும் என்று ஆன்றோர்கள் கூறும் சொற்கள் பொய்யல்ல என்பதை*

***"அல்லவை செய்தார்க்கு அறம்கூற்றம் ஆம் என்னும்***
***பல்லவையோர் சொல்லும் பழுதன்றே"[9]***

*என்றுவள்ளுவரின்வாழ்வியல்அறம்மெய்ப்பிக்கப்பட்டிருப்பதைஅறியலாம். மேலும்மன்னனின் ஆட்சிக்கொடுமையைத்தாங்கமுடியாதுகுடிமக்கள்அழுதுவடிக்கும்கண்ணீரேஅந்தஆட்சியை அரசனை அழிக்கும் கருவியாகும் இதனைத் தான் திருவள்ளுவர்*

***"அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே***
***செல்வத்தைத் தேய்க்கும் படை"[10]***

*என்று கூறியுள்ளதை அறியலாம். இளங்கோவடிகள் வள்ளுவரின் இதே வாழ்வியல் அறத்தை பின்பற்றி*

***அல்லல்உற்று ஆற்றாது ஆற்றாது அழுவாளைக் கண்டு ஏங்கி***
***மல்லல் மதுரையார் எல்லாரும் தாம்மயங்கிக்***
***களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி***
***வளையாத செங்கோல் வளைந்தது***
***இது என் கொல்?[11]***

*என்று தமது காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கண்டு கொள்ளலாம். ஒரு நாட்டை ஆளும் அரசன் தவறு செய்தால் அறமே கூற்றாக மாறித்தண்டித்துவிடும் இக்கருத்தையே வலியுறுத்தி இளங்கோவடிகள் "அரசியல் பிழைத் தோர்க்கு அறம் கூற்றாகும்" என்பதனை*

***"அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை***
***மறத்தலின்ஊங்கு இல்லை கேடு"[12]***

*என்ற குறள் கருத்தை அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவரின் வாழ்வியல் அறத்தொடு ஒப்பிட்டு விளக்கியுள்ளதை அறிய முடிகிறது.*

**பெருமை மிகு பத்தினியை பெரியோர்கள் தொழுவார்**

*போக நீள் புகழ் மன்னும் புகார் நகரில் வான் நிகர் வண்கைமா நாய்கனின் குலக் கொம்பாகத் தோன்றியவள் கண்ணகி. திருமகள் போன்ற வடிவமும் அருந்ததியின் கற்பை ஒத்ததிறனும் உடையவள் கண்ணகி என்று அறிமுகப்படுத்துகிறார் இளங்கோவடிகள். கணவனையே தெய்வமாகத் தொழக் கூடியவள் கண்ணகி என்கிறார். கனாத்திறம் உரைத்த காதையில் தேவந்தி கண்ணகியை நோக்கி தாழை மலர மணம் வீசும் சோமகுண்டம் சூரியகுண்டம் ஆகிய இரு பொய்கைகளில் நீராடிகாம தேவனைத் தொழும் மகளிர் இம்மையிலும் மறுமையிலும் கணவருடன் கூடிப் பிரியாமல் இருப்பர் என்று கூறியதைக் கேட்ட கண்ணகி அங்ஙனம் நீர்த்துறையில் மூல்கி தெய்வம் தொழுதல் 'பீடு அன்று'-13. என்று கூறி தேவந்தியின் கருத்தினை ஏற்க மறுத்தாள் கணவனைத் தெய்வமாக தொழக் கூடியவர்கள் மற்றைய தெய்வங்களை தொழ வேண்டிய தில்லை என்பதனைக் கண்ணகி வாய்லாக இளங்கோவடிகள் உணர்த்துவதைக் காணலாம் .*

***"தெய்வம் தொழாஆள் கொழுநன்தொழுது எழுவாள்***
***பெய் எனப்பெய்யும் மழை"[14]***

*என்னும்குறள்மூலம்வேறுதெய்வங்களைத்தொழாதவளாய்த்தன்கணவனையேதெய்வமாகக்*

*கருதிதொழுது உறக்கத்தில் இருந்து கண்விழிப்பவள் பெய் என்றால் மழை பெய்யும் என்று வாழ்வியல் அறத்தை தம் குறள் மூலம் உணர்த்தியுள்ளார். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இளங்கோவடிகள் தம் காப்பியத்தில்*

***"தெய்வம் தொழாஆள் கொழுநன் தொழுவாளைத்***
***தெய்வம் தொழும் தகைமை திண்ணிதால் தெய்வமாய்***
***மண்ணகமாதர்க்கு அணியாய் கண்ணகி***
***விண்ணக மாதர்க்குவிருந்து"***[15]

*என்னும் சிலப்பதிகாரம் பாடல் வரிகள் மூலம் மண்ணக மகளிர்க்கெல்லாம் அணி போன்றவளான கண்ணகி தெய்வமாகி விண்ணக மகளிர்க் குவிருந்தாயினாள். வேறு தெய்வத்தைத் தொழாது தன் கணவனைத் தொழுவாளைத் தெய்வம் தொழும் என்று விளக்கிய வாழ்வியல் அறம் இங்கு உணரத் தக்கதாகும். மேலும்*

***"வானம் பொய்யாதுவளம் பிழைப்பு அறியாது***
***நீள்நிலம் வேந்தர் கொற்றம் சிதையாது***
***பத்தினிப்பெண்டிர் இருந்தநாடு"***[16]

*என்றும் மிகவும் சிறந்த வாழ்வியல் அறத்தைக் கூறியிருப்பதைக் காணலாம். கணவனைத் தெய்வமாகத் தொழுது எழும்பத் தினிப்பெண்டிர் வாழும் நாட்டில் பருவமழை தவறாது, நிலவளமும் குன்றாது, பெரிய நிலப்பரப்பை ஆளும் வேந்தரின வெற்றியும் சிதையாது என்ற கருத்தை இளங்கோவடிகள் திருவள்ளுவரின் கருத்தோடு ஒப்பிட்டுக் கூறிபத்தினிப் பெண்டிரின் பெருமையை பறை சாற்றியிருப்பதைக் காணலாம்.*

**ஊழ்வினை தொடர்ந்து வந்து பற்றியே தீரும்**

*தீய ஊழை நீக்குதற் பொருட்டு அதற்கு எதிரான வழியொன்றைச் சிந்திக்க எண்ணுவோம். ஆதனால் அதுநாம் நினைத்த அதே வழியாகவோ பிரிதொன்றன் வழியாகவோ அதனிலும் முற்பட்டு வந்து நிற்கும் வினைப் பயன்விடாது தொடரும். நம்மை வந்தடைய வேண்டிய துன்பம் எக்காரணம் கொண்டும்வராமல் போகாது என்பதை*

***"ஊழின் பெருவலியா வுள?மற்று ஒன்று***
***சூழினும் தான் முந்துறும்"***[17]

*என்னும் திருக்குறள் கருத்து நம்முடைய வாழ்வியல் அறத்தை எடுத்துக்காட்டியிருப்பதை அறியலாம். ஊழ்வினை இருவகையாகப் பிரிந்து நிற்கக் கூடியது அவை நல்வினை தீவினை என்பனவாகும். அதனை ஆகுஊழ் போகுஊழ் என்றும் கூறுவர். தன்வினைத் தன்னைச்சுடும், தினை விதைத்தவன் தினை அறுப்பான் என்ற பழமொழிக்கு ஏற்ப சிலப்பதிகாரத்தில்*

***"பரதன் என்னும் பெயரன் அக்கோவலன்***
***விரதம்நீங்கிய வெறுப்பினை ஆதலின்"***[18]

*என்று இளங்கோவடிகள் கூறியிருக்கும் வாழ்வியல் நமக்குச் சான்றாக அமைகின்றது. ஒருவரின் மகிழ்ச்சியான அல்லது துன்பமான வாழ்க்கைக்குக் காரணம் அவரது முற்பிறவியின் பயன் என்று திருக்குறளும் சிலப்பதிகாரமும் கூறுகின்றன.*

***"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை***
***வீயாது அடி உறைந்தற்று"[19]***

*என்னும் குறள் மூலம் ஒருவனுடைய நிழல் அவனை விட்டு நீங்காமல் அவன் அடியில் தங்கியிருத்தல் போல பிறர்க்குத் தீவினை செய்தால் அக்கேடு அவனை நிழல் போல் தொடர்ந்து வந்து துன்புறுத்தும். தீவினைக்கு மன்னிப்பே கிடையாது தீவினை செய்தவர் இந்தப் பிறவியில் இல்லை என்றாலும் அடுத்த பிறவியிலாவது அனுபவித்தே தீற வேண்டும் என்பது திருவள்ளுவர் இச்சமுதாயத்திற்கு வகுத்துதந்த வாழ்வியல் நெறியாகும். இதே கருத்தினை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரத்தில்*

***"உம்மை வினைவந்து உருத்தகாலைச்***
***செம்மை இலோர்க்குச் செய்தவம் உதவாது"[20]***

*என்று இளங்கோவடிகள் கூறியிருப்பதை அறியலாம்.*

**முடிவுரை**

*இலக்கியப் படைப்புகளுக்கு திருக்குறள் இலக்கணமாக அமைந்துள்ளது என்றால் பொருந்தும். அந்த வகையில் திருக்குறள் நெறிகளை இலக்கணமாகக் கொண்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத் தினைப் படைத்துள்ளார் என்பதை காப்பியத்தின் போக்கில் திருக்குறளின் அறச் சிந்தனைகள் பரவிக் கிடப்பதினை அறியலாம். வள்ளுவத்தின் கருத்துக்களை உள் வாங்கிக் கொண்டு மூன்று நிலைப்பாடுகளில் அறத்தின் தன்மையினையும் கற்பு நெறியினையும் ஊழின் வலிமையினையும்வலியுறுத்திசிலப்பதிகாரத்தினைவாழ்வியல்நெறிக்குவழிகாட்டும்வெற்றிக் காப்பியமாகப் படைத்து தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்துள்ளார் இளங்கோவடிகள். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு என்று நம்மையெல்லாம் பெருமைப்படச் செய்துள்ளார் பாரதியார் அதைப்பத்தரமாகப் பாதுகாப்போம் உறுதிமொழி எடுத்துக்கொள்வோம்.*

**அடிக்குறிப்புகள்**

1. *திருக்குறள் 50 -பக்கம்-44 தண்டபாணி தேசிகர். பதிப்பு மதுரை காமராஜர்*
2. *பல்கலைக்கழகம் ஆண்டு 2008.*
3. *திருக்குறள் 34 -பக்கம் -9 டாக்டர்.ஜீ.யூ.போப்.நியூசெஞ்சுரி புத்தக நிலையம் தமிழ் ஆங்கிலம் 2012.*
4. *திருக்குறள் 35 -பக்கம் -9 டாக்டர்.ஜீ.யூ.போப். நியூசெஞ்சுரி புத்தக நிலையம் தமிழ் -ஆங்கிலம் 2012.*
5. *சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை பக்கம்-237 கெ.சிவராமலிங்கம். இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை 2012.*
6. *திருக்குறள் 41-பக்கம்-18 டாக்டர்.ஜீ.யூ.போப்.நியூசெஞ்சுரி புத்தக நிலையம் தமிழ் -ஆங்கிலம் 2012.*
7. *திருக்குறள் 548 -பக்கம்-121 டாக்டர்.ஜீ.யூ.போப்நியூசெஞ்சுரி புத்தக நிலையம் தமிழ் -ஆங்கிலம் 2012.*
8. *திருக்குறள் 541 -பக்கம்- 120 பகலவன் கற்பகம் புத்தகாலயம். நொவினோ ஆப்செட் பதிப்பு 2011*
9. *சிலப்பதிகாரம் கொலைக் களக்காதை பக்கம் -242 கெ.சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை -2012.*

10. சிலப்பதிகாரம் வழக்குரை காதை கெ.சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை-2012.
11. திருக்குறள் 555பக்கம்-122 பகலவன் நொவினோ பதிப்பகம். கற்பகம் புத்தகாலயம் 2011.
12. சிலப்பதிகாரம் ஊர் சூழ்வரி கெ.சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை-2012.
13. திருக்குறள் 32-பக்கம்-16 பகலவன்.நொவினோபதிப்பகம் கற்பகம் புத்தகாலயம் 2011.
14. சிலப்பதிகாரம் கனாத்திறம் உரைத்த காதைபக்கம்-133 கெ.சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் -2012 .
15. திருக்குறள் 55-பக்கம்-20 பகலவன்.நொவினோபதிப்பகம் கற்பகம் புத்தகாலயம் 2011.
16. சிலப்பதிகாரம் கட்டுரைக் காதை பக்கம் -310 கெ.சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை-2012.
17. சிலப்பதிகாரம் அடைக்கலக் காதைபக்கம்-226 கெ.சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை-2012.
18. திருக்குறள் 380 பக்கம்- 85 பகலவன். கற்பகம் புத்தகாலயம் நொவினோபதிப்பகம்-2011.
19. சிலப்பதிகாரம் கட்டுரை காதை பக்கம் -306 கெ. சிவராமலிங்கம். இந்தியா பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை-2012.
20. திருக்குறள் 208 பக்கம்-51 பகலவன் கற்பகம். புத்தகாலயம் நொவினோபதிப்பகம் 2011.
21. சிலப்பதிகாரம் கட்டுரை காதை பக்கம் -308 கெ. சிவராமலிங்கம் இந்திய பண்பாட்டு ஆய்வு மையம் சென்னை-2012.

## References

1. *Dandapani Desikar, Thirukkural 50, Madurai Kamaraj University Edition, 2008.*
2. *Dr. G.U.Pope, Thirukkural 34, New Century BookStore, 2012.*
3. *K.Sivaramalingam, Silappathikaram Kollai Kalakathai, Indian Council of Cultural Research, Chennai, 2012.*
4. *Thirukkural 541, Pagalavan Karpagam Budhakalayam. Novino Offset Edition, 2011.*